# பால போத

## இலக்கண வினாவிடை

ஐந்தாம் வகுப்பிற்குரியது

**Edward Swamickan**

Printed at
**Arunothiyam Printing Press,**
Vannarpet,—Palamcottah.
1932

Rights Reserved] **[Price 3 Annas**

I. M.

## OPINIONS—அபிப்பிராயம்

பாளையங்கோட்டை பிஷப் சார்ஜன்ட் ஆசிரியர் பயிற்சிக் கூடத்தையடுத்த பயிற்சி விளக்கப் பள்ளிக்கூட (Model School) ஆசிரியர், திரு A. J. எட்வர்ட் சுவாமிக்கண். அவர்கள் எழுதி வெளியிடும் பால போத இலக்கணம் இரண்டாம் புத்தகத்தைப் பார்வையிட்டனன். புத்தகம் மாணவர்க்கு விளங்கத்தக்க நடையில் விளக்கம், எடுத்துக் காட்டுகளுடன் விளங்குகிறது. ஆசிரியரின் ஆங்கிலப் பயிற்சித்திறன் இந்நூலமைப்பிலும்போக்கிலும்இனிதுவிளங்குகிறது. புணரியற்பகுதி ஆறுவதுவகுப்பு மாணவர்க்கும் பயன் படுமெனத் தோன்றுகிறது. தமிழ்ச் சொற்களைப் பிழையற வெழுதுவதற்கும் பேசுவதற்குமே இலக்கண நூலேற்படுவதாதலின் அவ்வுண்மை இந்நூலிறுதியிலமைக்கப்பட்டிருக்கும் சொல்விளக்கப் பகுதியால் விளங்கும். மாணவர்க்குப் பயன்படத்தக்க சில குறிப்புகளை அடுத்தபதிப்பிற் சேர்க்கக் கேட்டிருக்கிறேன். ஆசிரியரவர்கள் அங்ஙனஞ் செய்ய விசைந்துள்ளார்கள்.

தமிழன்பர்கள் இத்தகைய நூல்களைப் போற்றி ஆசிரியரவர்களை ஊக்குதல் இன்றிமையாதது. திருவருள் முன்னிற்க.

வித்துவான் பு. சி. புன்னைவனநாதன்
தலைமைத் தமிழாசிரியர்,
அர்ச். சவேரியர் கல்லூரி
பாளையங்கோட்டை.

"புலவரகம்"
15—9—1932

# முகவுரை

இப் புத்தகம் ஐந்தாம் வகுப்பிற்காக இயற்றப்பட்டுள்ளது. மற்றும் 4, 6, 7, 8 [i, ii, iii, பார்ம்] வகுப்புக்களுக்கும் மத்திமபோதனுமுறையை அனுசரித்து, ஒவ்வொருவகுப்பிலும் படிக்கவேண்டியபாட அளவுக்குத்தக்கதாகவும், பலஉதாரணங்கள், அப்பியாசங்களுடனும், அநுபந்தங்களுடனும் இனிய, எளிய நடையில் எழுதி, அச்சிட்டு, வெளிப்படுத்தி யுள்ளேன்.

தமிழ் மொழியின் முன்னேற்றம் விரும்பும் பெரியோர்கள் இந்த நன்முயற்சியை ஆதரிக்க விரும்புகின்றேன்.

இப்புத்தகங்களை எழுதுவதிலும், பிரசுரஞ் செய்வதிலும் ஆலோசனையும் ஒத்தாசையும் அளித்த பெரியோர், நண்பர்களுக்கு என் மிகுந்த நன்றியறிதல் உரிமையாகின்றது.

மேலும் இப்புத்தகங்களின் கையெழுத்துப் பிரதியைப் பார்வையிட்டுத் திருத்தம் செய்து கொடுத்த செயின்று ஜான்ஸ் காலேஜ் தலைமைத் தமிழ்ப் பண்டிதர் வித்துவான் தா. மாசிலாமணி அவர்களுக்கும் என் நன்றியறிதல் மிகுந்துளது.

**A. J.** எட்வர்ட். சுவாமிக்கண்,
*பிஷப் சார்சென்று பயிற்சிப் பாடசாலையைச் சேர்ந்த*
மாடல்ஸ்கூல், முருகன்குறிச்சி
பாளையங்கோட்டை.

# பொருளடக்கம்—II.

1. உயிர்எழுத்து:- குறில், நெடில், சுட்டு, வினா.
2. மெய்எழுத்து:- வல்லினம், மெல்லினம், இடையினம்
3. உயிர்மெய்யெழுத்து. ஆய்தஎழுத்து.
4. சொற்கள்:-ஆறுவகைப் பெயர்ச்சொல், வினையாலணையும் பெயர்.
5. திணை, பால், எண், இடம், வேற்றுமை.
6. தன்மை, முன்னிலைப் பெயர்கள், பொதுப் பெயர்கள், வேற்றுமை ஏற்கும் விதம்.
7. மகர, அகர, வையீற்றுப்பெயர்கள் வேற்றுமை ஏற்கும் விதம்.
8. பெயர்ச்சொல் முடிபு, இலக்கணம் கூறும் விதம்.
9. வினைவகைகள்:- தெரிநிலை, குறிப்பு, உடன்பாடு, எதிர்மறை, ஏவல், வியங்கோள்.
10. காலம், பகுதி, விகுதி, இடைநிலை.
11. வேறுவினைமுற்று வகைகள்.
12. எச்சவினை:- பெயரெச்சம், வினையெச்சம்.
13. இடைச்சொல் வகைகள்:-
14. உரிச்சொல்.
15. வாக்கியம்:- எழுவாய், பயனிலை, செயப்படுபொருள், தோன்றாஎழுவாய், பெயர்ப்பயனிலை அவை கண்டுபிடிக்கும் விதம்.
16. அடைமொழிகள், வாக்கியத்தின் பயன்கள்.
17. புணர்ச்சிகள்.

1024
494.8115

குறிப்பு:- இருண்ட எழுத்தில் அச்சிடப்பட்டவை இவ்வகுப்புக்குப் புதிய பாடமாகும்.

# பால போத இலக்கணம்—II

## 1. தமிழ் இலக்கணம்

தமிழ்ப் பாஷையைப் பிழையறப் பேசவும் எழுதவும் கற்பிக்கும் நூல்.

## 1. எழுத்து

### 2. தமிழ் எழுத்துக்கள்

1. உயிர் எழுத்து
2. மெய் எழுத்து
3. உயிர்மெய் எழுத்து
4. ஆய்த எழுத்து

என நான்கு வகைப்படும்.

### 3. உயிர் எழுத்து

தானாய் ஒலிக்கவல்ல எழுத்து. அது மெய் எழுத்துக்கு உயிராய் நின்று ஒலி உண்டாக்கும்.

உயிர் எழுத்துக்கள் குற்றெழுத்து, நெட்டெழுத்து என்றும் அவைகளில் சில சுட்டெழுத்து, வினாவெழுத்து என்றும் வகுக்கப்படும்.

### 3—1. குற்றெழுத்து

குறுகிய ஒலியுள்ள எழுத்து. அ, இ, உ, எ, ஒ என்பன ஐந்தும் குறில்.

### 3—2. நெட்டெழுத்து

நீண்ட ஒலியுள்ள எழுத்து. ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்பன ஏழும் நெடில்.

### 3—3. சுட்டெழுத்து

சுட்டுப்பொருள் உணர்த்தும் எழுத்து. அ, இ, உ என்பன மூன்றும் சுட்டெழுத்துக்கள்.

| | | |
|---|---|---|
| அவன் | இவள் | உவன் |
| அப் பையன் | இம் மாடு | உவ் வீடு |

## 3—4. வினாவெழுத்து

கேள்வி கேட்க உதவும் எழுத்து. ஆ, எ, ஏ, ஓ என்ற உயிர் எழுத்துக்களும், யா என்ற உயிர் மெய் எழுத்தும் வினாவெழுத்துக்கள்.

1. அவனா செய்தான்? 2. எவள் செய்தாள்?
3. ஏன் செய்தான்? 4. அவனோ செய்தான்?
5. யாது செய்தான்?

### அப்பியாசம் I

வினா வாக்கியமாக எழுது.

(உ-ம்) இராமன் விளையாடிக் கொண்டிருந்தான்.

1. இராமனா விளையாடிக் கொண்டிருந்தான்?
2. இராமன் விளையாடிக் கொண்டிருந்தானோ?

1 இராமன் உன் சிநேகிதன்.
2. உன் சகோதரன் இனம் பெற்றான்.
3 தாமஸ் சுவாமிக்கண் நல்லவன்.
4. இது உன் வீடு.

## 4. மெய் எழுத்து

தானாய் ஒலிக்க வலியற்ற எழுத்து. அது உயிர் எழுத்தின் உதவியினால் ஒலிக்கும். மெய் எழுத்து உடல், ஒற்று, புள்ளி எனவும் படும்.

க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் என்னும் பதினெட்டும் மெய்யெழுத்துக்கள்.

இவை உயிரெழுத்தின் உதவியினால் ஒலிக்கும். ஒலியின் இயல்புக்குத் தக்கதாக இவை வல்லினம், மெல்லினம், இடையினம் என மூன்று வகைப்படும்.

### 4—1. வல்லினம்

வலிய ஒலியுள்ள மெய்யெழுத்து. க், ச், ட், த், ப், ற் என்பன ஆறும் வல்லெழுத்துக்கள்.

220418

TB P31C5 N32

## 4—2. மெல்லினம்

மெல்லிய ஒலியுள்ள மெய்யெழுத்து. ங், ஞ், ண், ந், ம், ன் என்பன ஆறும் மெல்லெழுத்துக்கள்.

## 4—3. இடையினம்

மத்திம ஒலியுள்ள மெய்யெழுத்து ய், ர், ல், வ், ழ், ள் என்பன ஆறும் இடையெழுத்துக்கள்.

## 5. உயிர் மெய்யெழுத்து

உயிர் எழுத்தும் மெய் எழுத்தும் ஒன்றுபட்டுப் பிறக்கும் எழுத்து.

உயிர்மெய் எழுத்துக்கள் இருநூற்றுப் பதினாறு. பதினெட்டு மெய்களின் மேலும் பன்னிரண்டு உயிர்களும் தனித்தனியே ஒன்றுபடுவதினால் அவை பிறக்கின்றன. இவை உயிர் மெய்க்குறில், உயிர் மெய் நெடில் என இருவகைப்படும்.

க் + அ = க, க் + ஆ = கா, க் + ஔ = கௌ.

க, கா, கி..........கௌ முதலியன உயிர்மெய் எழுத்துக்கள்.

## 6. ஆய்த எழுத்து

மூன்று புள்ளி வடிவமுள்ளது. ஃ இது ஆய்த வெழுத்து. இவ்வெழுத்து சொல்லின் இடையில் மட்டும் வரும்.

அஃது, இஃது, எஃகு.

### அப்பியாசம் 2.

உயிர்மெய் எழுத்துக்கள் உண்டாக்கு.

ங் + ஈ, ந் + உ, ஞ் + ஊ, ற் + ஒ, ண் + ஆ

ள் + உ, ல் + ஐ, ன் + ஓ, ற் + ஆ, ழ் + உ

ண் + ஐ, ள் + ஔ, க் + ஏ, ச் + ஒ, ட் + ஈ

### அப்பியாசம் 3.

நெடில், குறில், வினா, சுட்டு, வல்லினம், மெல்லினம், இடையினம் என்னும் வகுப்புக்களில் ஒவ்வொரு எழுத்தும் எவ்வினம்?

அ, ண், ட், ர், உ, ற். ம், ழ், ஆ, ஐ,
ன், ப், ஒ, ல், ங், ஔ.

### அப்பியாசம் 4.

உயிர்மெய் எழுத்துக்களைப் பிரித்தெழுது.

க, ட, கௌ, டெ, நு, ஞீ, சே, தீ, ப,
ரா, யூ, ழி, ஞு, றை, ச, லூ, ஞோ, மெ,
த, ணை, வே, ரூ, நே, லா, க, ச, த, ரொ

## 7. வடஎழுத்து

தமிழ்ப் பாஷையில் வழங்கும் சம்ஸ்கிருத எழுத்து. ஜ, ஷ, ஸ, ஹ, க்ஷ என்பன ஐந்தும் வட எழுத்துக்கள்.

ஜலம், விஷம், வஸ்திரம், ஹரி, பக்ஷம்.

# II. சொல்லியல்

## 8. சொல்

ஓர் எழுத்துத் தனித்து நின்றும் பல எழுத்துக்கள் தொடர்ந்து நின்றும் ஒரு பொருளை உணர்த்துவது.

(உ-ம்) ஆ, பூ, தீ, ஆடு, பூட்டு, தங்கம்.

## 9. தமிழ்ச் சொற்கள்

1. பெயர்ச்சொல்—கல், தூணில், ஆமை.
2. வினைச்சொல் —வா, போ, நடந்தான்.
3. இடைச்சொல்—உம், ஆல், போல.
4. உரிச்சொல் —சால, உறு, தவ, நனி.

# III. பெயர்ச்சொல்

## 10. பெயர்ச்சொல்

பொருளின் பெயராய் வழங்கும் சொல். பெயர்ச் சொற்கள் பொருட்பெயர், இடப்பெயர், காலப்பெயர், சினைப்பெயர், பண்புப்பெயர், தொழிற்பெயர் என ஆறு வகை.

1. பொருட்பெயர் — பையன், கல், நாய், நெல்.
2. இடப்பெயர் — வீடு, ஊர், தேசம், உறையூர்
3. காலப்பெயர் — பகல், சனி, பங்குனி, மணி.
4. சினைப்பெயர் — தலை, விரல், வேர், இலை.
5. பண்புப்பெயர் — நன்மை, இனிப்பு, கருமை, கடினம்
6. தொழிற்பெயர் — நடத்தல், பார்வை, வரவு, நடனம்

குறிப்பு:- பொருள் வேறு. பொருளின் பெயர் வேறு. பொருள் பெயர்ச்சொல் அன்று பொருளின் பெயரே பெயர்ச்சொல்.

## 11. பெயர்ச்சொல் (தொடர்ச்சி)

### 11—1. சினைப்பெயர்

உறுப்புக்களின் பெயர். சினை = உறுப்பு. பொருட்களினுடைய பாகங்களின் பெயர்கள் சினைப்பெயர்கள்.

(உ-ம்) கண், விரல், குடல், கிளை, இலை, நரம்பு.

### 11—2. பண்புப்பெயர்

பொருட்களில் அமைந்துள்ள குணங்களின் பெயர்.

| | பொருட் பெயர் | பண்புப்பெயர் |
|---|---|---|
| கல்லினது கடினம். | கல் | கடினம் |
| கத்தியின் கூர்மை. | கத்தி | கூர்மை |
| ரோஜாவின் வாசனை. | ரோஜா | வாசனை |
| முகத்தின் அழகு. | முகம் | அழகு |
| மனத்தினது நேர்மை. | மனம் | நேர்மை |

குறிப்பு:- பண்பைப் பொருளிலிருந்து பிரிக்கமுடியாது.

## 11—3. தொழிற்பெயர்

தொழிலுக்குப் பெயராய் வழங்கும் சொல் அது வினையடியாகப் பிறக்கும். வினை—தொழில்

| வினையடி | தொழிற்பெயர் |
| --- | --- |
| படி | படித்தல், படிப்பு |
| வா | வருகை, வரவு, வருதல் |
| செய் | செய்கை, செயல், செய்தல் |
| கெடு | கெடுதி, கேடு, |
| ஓடு | ஓட்டம், ஓடுதல். |

## 11—4. வினையாலணையும் பெயர்

வினைமுற்றால் அணைந்து பெயரின் தன்மையை அடைந்தது.

அது செயலையும், காலத்தையும், செய்பவனையும், இருதிணை ஐம்பால் மூவிடங்களிலும் உணர்த்தி, வேற்றுமையுருபை ஏற்று வரும்.

(உ-ம்) பெற்றோம், கற்றாய், தந்தான்.

1. பெற்றேமை—தன்மை இடம், 2-ம் வேற்றுமை
2. கற்றாயை—முன்னிலை இடம், ,, ,,
3. தந்தானை—படர்க்கை இடம், ,, ,,

படர்க்கை வினையாலணையும் பெயர்களில் ஒன்றன்பால் வினையாலணையும் பெயரைத்தவிர மற்றவை சிறிது வேறுபட்டு வருதலும் உண்டு.

(உ-ம்) படித்தவன், தந்தவர், செய்தவை.

### அப்பியாசம் 5.

பெயர்ச்சொல்லின் வகை என்ன?

வற்றல், சீனி, கிழங்கு, சுண்டல், காம்பு, ஆணி, பால், கணக்கன், சதுரம், நகை, ஈயம், செம்மை, விநாடி, நாடு, பல், கோட்டை, நலம்.

12. பெயர்ச்சொல்லில் அறியவேண்டியவை திணை, பால், எண், இடம், வேற்றுமை என ஐந்தாம்.

## 12—1. திணை

என்பது குலம். அஃது உயர்திணை, அஃறிணை என இரு வகைப்படும்.

உயர்திணை மக்கள்; தேவர், நரகர்களின் பெயர்.

அஃறிணை மக்கள், தேவர், நரகர் அல்லாதவைகளின் பெயர். அல் + திணை = அஃறிணை. அதாவது உயர்திணை அல்லாத இழிந்ததிணை.

| உயர்திணை | அஃறிணை |
|---|---|
| 1. மக்கள்—அரசன், சபையார் | கல் |
| 2. தேவர்—கடவுள், தேவதூதர்கள் | மரம் |
| 3. நரகர்—பசாசு, பேய்கள் | நன்மை |

## 12—2. பால்

என்பது திணையின் பிரிவு. அது ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் என ஐந்து வகைப் படும்.

1. ஆண்பால் உயர்திணையில் ஆணின் பெயரையும்,
2. பெண்பால் ,, பெண்ணின் பெயரையும்,
3. பலர்பால் ,, ஆண்களிலாவது, பெண்களிலாவது, அவ்விருவரிலாவது பலரின் பெயரையும்,
4. ஒன்றன்பால் அஃறிணைப் பொருளில் ஒன்றின் பெயரையும்,
5. பலவின்பால் அஃறிணைப் பொருளில் பலவற்றின் பெயரையும் உணர்த்தும்.

| | |
|---|---|
| உயர்திணைப் பால் | 1. ஆண்பால் — அரசன், மகன்.<br>2. பெண்பால் — அரசி, மகள்.<br>3. பலர்பால் — அரசர்கள், அரசிகள், மக்கள். |
| அஃறிணைப் பால் | 1. ஒன்றன்பால்—கல், மாடு, மரம்.<br>2. பலவின்பால்—கற்கள், மாடுகள், மரங்கள். |

குறிப்பு:- 1. அஃறிணைப் பொருட்களில் ஆணின் பெயரையும், பெண்ணின் பெயரையும் ஒன்றன்பால் எனக் கொள்வது வழக்கம்.

2. பெரும்பாலும் ஆண்பாற் பெயர்களுக்கு அன், ஆன் என்பனவும், பெண்பாற் பெயர்களுக்கு அள், ஆள், இ, ஐ என்பனவும் பால் உணர்த்தும் விகுதியாகும்.

## அப்பியாசம் 6

### (I) பால் மாற்றி எழுது

(உ-ம்) என் தமையன் இங்கு வந்தான்.
என் தமக்கை இங்கு வந்தாள்.

1. என் புதல்வன் தன் பாடங்களைப் படிக்கிறான்.
2. சிஷன் ஒருவன் தன் குருவிடம் சேர்ந்தான்.
3. உத்தமியைச் சிலர் கண்டு பேசினார்கள்.
4. என் இனத்தான் ஒரு வேலைக்காரியை அனுப்பினான்.
5. இவன் மனைவி கோட்ரோனின் புத்திரி.

### (II) மாற்றுப்பால் கொடு

பணக்காரன், வம்பி, கிறிஸ்தவன், அண்ணன், கன்னிகை, ஆடவர், தனவான், விதுரன், நங்கை, தம்பி, சக்கரவர்த்தி, தோழன், துஷ்டை, புத்திரன், எளியவன், கற்றோன்.

## 12—3. எண்

என்பது பொருட்களின் எண்ணிக்கை. அது ஒருமை, பன்மை என இரு வகைப்படும்.

ஒரு பொருளின் பெயர் ஒருமை. ஒன்றுக்கு அதிகமான பொருட்களின் பெயர் பன்மை.

பன்மைப்பெயர் அர், ஆர், கள், மார் என்பனவற்றில் ஒன்றை ஒருமைப் பெயரின் ஈற்றில் சேர்ப்பதினால் உண்டாகும்.

(உ-ம்) மனுஷர், பெண்கள், குருமார்.

### அப்பியாசம் 7

எண் மாற்றி எழுது.

(உ-ம்) குதிரை மேய்ந்து கொண்டிருந்தது. ஒருமை
குதிரைகள் மேய்ந்து கொண்டிருந்தன. பன்மை

1. உழவன் எருதுகளை வளர்க்கிறான்.
2. வேட்டை நாய் மிகவும் உபயோகமுள்ளது.
3. குடியானவர்கள் தீர்வை செலுத்துகிறார்கள்.
4. சிறிய ஈக்கள் பாலில் விழுந்தன.
5. என் அண்ணன் மிகவும் நல்லவன்.

## 12—4. இடம்

நாம் பேசுவதிலும் எழுதுவதிலும் சொற்கள் வழங்கும் தானம். அது தன்மை, முன்னிலை, படர்க்கை என மூவகைப் படும்.

தன்மை இடம் பேசுவோனையும்,
முன்னிலை இடம் பேசுவதை முன் நின்று கேட்போ
[னையும்

படர்க்கை இடம் பேசப்படுவோனையும், பேசப்படும் பொருளையும் உணர்த்தும். தன்மை, முன்னிலை அல்லாத இடம் படர்க்கை இடம்.

1. தன்மை ஒருமைப்பெயர். —நான், யான்.
தன்மைப் பன்மைப்பெயர்—நாம், யாம். நாங்கள்.
2. முன்னிலை ஒருமைப்பெயர்—நீ.
முன்னிலைப் பன்மைப்பெயர்—நீர், நீங்கள்.
3. படர்க்கை ஒருமைப்பெயர்—அவன், அவள், அது, மரம்.
படர்க்கைப் பன்மைப்பெயர்—அவர்கள், அவைகள், மரங்கள்.

### அப்பியாசம் 8.

பெயர்ச்சொல்லின் திணை, பால், எண், இடம் கூறு.

1. இது எங்கள் பாட்டனர் கட்டிய வீடு.
2. நேற்று நான் கடையில் பாக்கு வாங்கினேன்.
3. அவர்கள் ஆற்றில் ஸ்நானம் செய்கிறார்கள்.
4. நீர் அவனுக்கு ஐந்து புத்தகம் கொடுத்தீர்.
5. அவள் தகப்பனர் பெரிய பணக்காரன்.

| பெயர் | திணை | பால் | எண் | இடம் |
|---|---|---|---|---|
| | | | | |

## 13. வேற்றுமை

பெயரின் பொருளை வேறுபடுத்துவது.

அது எட்டுவகைப்படும். வேற்றுமை உருபுகளில் ஒன்று பெயர்ச் சொல்லின் ஈற்றில் நின்று வேற்றுமையை உணர்த்தும்.

### 13—1. முதலாம் வேற்றுமை

பெயரின் இயல்பு. அது எழுவாய் வேற்றுமை எனவும் படும்

(உ-ம்) இராமன், மரம், நீ, கல், அவர்கள், நான்.
இராமன் என் வீட்டுக்கு வந்தான். இராமன்—எழுவாய்.

## 13—2. இரண்டாம் வேற்றுமை

இதன் உருபு ஐ என்பது. அது செயப்படு பொருள் வேற்றுமை எனவும் படும். இரண்டாம் வேற்றுமை உருபை அடைந்த பெயர் செயப்படு பொருள்.

நான் கந்தனைக் கண்டேன். ஐ உருபு விரிந்தது.

கந்தன் நாய் வளர்க்கிறான். ஐ உருபு தொகுத்தது.

கந்தன், நாய் என்பன செயப்படு பொருள்கள்.

### அப்பியாசம் 9.

பெயர்ச்சொல்லை இரண்டாம் வேற்றுமையாக்கு.

குளம், பல், ஆணி, பனை, வாழை, வயிறு, பொன், தவறு, சுவர்.

## 13—3. மூன்றாம் வேற்றுமை

இதன் உருபுகள் ஆல், ஆன், ஒடு, ஓடு, உடன், என்பன.

1. கொல்லனால் செய்த ஆயுதங்கள். ஆல்
2. தம்பியோடு வா. ஒடு
3. கந்தனோடு அவன் இஷ்டர் போயினர். ஓடு
4. கன்றுடன் பசு வந்தது. உடன்

### அப்பியாசம் 10.

(1) மூன்றாம் வேற்றுமையின் உருபுகள் எவை?

(2) ஆல், உடன் என்னும் உருபுகளைத் தனிவாக்கியங்களில் அமை.

(3) கீழ்க்கண்டதில் மூன்றாம் வேற்றுமைப் பெயர்கள் எவை?

அ. அதைக் கொண்டு போக என்னால் முடியாது.

ஆ. நீயும் இராமனோடு போய் விடு.

இ. கள்ளனை மரத்துடன் இறுகக் கட்டினார்கள்.

## 13—4 நான்காம் வேற்றுமை

இதன் உருபு கு என்பது.

உன் புத்தகங்களுக்கு அட்டை போடு. கு

இராமன் உனக்குப் பந்துவா? கு

### அப்பியாசம் 11.

1. கொக்கு, உலக்கை, அன்பு, சொல், சுக்கு, வாய், இவைகள் நான்காம் வேற்றுமையில் எவ்வாறாகும்?

2 நான்காம் வேற்றுமைப் பெயர்களை எடுத்தெழுது.

அ. கந்தனுக்கு மூக்கு இல்லை.

ஆ. தேக்குமரம் உங்களுக்குத் தெரியுமா?

இ. அவளுக்கு நாக்கு கட்டை.

## 13—5 ஐந்தாம் வேற்றுமை

இதன் உருபுகள் இல், இன், நின்று, இருந்து என்பன.

1 இஃது காக்கையில் கரிது. இல்
2. மலையின் வீழ் அருவி. இன்
3 மரத்தினின்று இறங்கி வா. நின்று
4. இவர்கள் என் ஊரிலிருந்து வந்தனர். இல் + இருந்து

### அப்பியாசம் 12.

ஐந்தாம் வேற்றுமைப் பெயர்களை எடுத்தெழுது.

1. யாரிலும் மேலான அன்பர் மாநேசரே.
2. இராமா! மெத்தையினின்று இறங்கு.
3. இராஜா சென்னையிலிருந்து புறப்பட்டுவிட்டார்.
4. இரும்பினும் உபயோகமான வஸ்து இல்லை.

## 13—6. ஆறும் வேற்றுமை

இதன் உருபுகள் அது, உடைய, என்பன. இவ் வேற்றுமை உடைமைப் பொருளை உணர்த்தும்.

1. இது எனது புத்தகம். அது
2. மரங்களினுடைய வேர்கள் நீண்டவை. உடைய

குறிப்பு:- இது என் புத்தகம், மரங்களின் வேர்கள் நீண்டவை என வேற்றுமை உருபு தொகுத்தும் நிற்கும்.

### அப்பியாசம் 13.

ஆறாம் வேற்றுமை அடைந்த பெயர்கள் எவை?

ஏ. 1. கந்தனுடைய தோட்டம் பெரியது.
2. உன் புத்தகங்களை எடுத்தது யார்?
3. உங்கள் தோட்டம் எங்கு இருக்கிறது?
4. நம் தேசம் சகல வஸ்துக்களும் உடையது.

பி. இப் பெயர்களில் ஆறும் வேற்றுமை உருபு ஏற்றிச் சொல்லு.

நீ, அவர், நீர், நாம், சீதை, வண்டி.

## 13—7. ஏழாம் வேற்றுமை

இதன் உருபுகள் இல், இடத்தில், கண் முதலியன. இவ் வேற்றுமை இடப்பொருளை உணர்த்தும்.

1. இராமர் சிலகாலம் காட்டில் வசித்தார். இல்
2. திரௌபதி சபையின் கண் கொண்டுவரப்பட்டாள். கண்
3. உன்னிடத்தில் பணம் உண்டா? இடத்தில்

### அப்பியாசம் 14.

ஏ. ஏழாம் வேற்றுமை உருபு ஏற்றிக்கூறு.

கிணறு, முகடு, பாய், வீடு, பல், ஊர், எலும்பு, நகம்.

பி. ஏழாம் வேற்றுமைப் பெயர்கள் எவை?

1. அவர்கள் பள்ளிக்கூடத்தில் படித்தவர்களா?
2. அவன் கன்னத்தில் ஒரு வியாதி கண்டிருக்கிறது.
3. குன்றின் கண்ணுள்ள கோயிலில் தீபம் ஏற்றுவார்கள்.
4. குற்றவாளி சபையின்கண் கொண்டுவரப்பட்டாள்.

## 13—8 எட்டாம் வேற்றுமை

பெயரின்விகாரமே. இவ்வேற்றுமை விளித்தல் பொருளை உணர்த்தும். விளித்தல்—அழைத்தல்.

1. மகனே! இங்குவா.
2. இராமா! எங்கே போயிருந்தாய்?

### அப்பியாசம் 15.

எட்டாம் வேற்றுமைப் பெயர் எது?

அ. 1. குழந்தாய்! ஏன் அழுகிறாய்?
2 கந்தா! உன் கற்பலகையைக் கொடு.
3. என் மகனே! அற்பரோடு சேராதே.

ஆ. முதல் எட்டு வேற்றுமைகளையும் கூறு.

அவன், பாக்கு, காடை, வனம், பொன், கொக்கு.

## 14. வேற்றுமை [ தொடர்ச்சி ]

குறிப்பு. 1. நான் என்பது முதலாம் வேற்றுமையில் மட்டும் வரும்.

குறிப்பு. 2. தன்மை ஒருமை, பன்மைப் பெயர்களும், முன்னிலை ஒருமை, பன்மைப் பெயர்களும், வேற்றுமை உருபுகளை ஏற்கும்போது

| | | | | |
|---|---|---|---|---|
| யான் | என்பது | என் | எனவும் | |
| நாம் | ,, | நம் | ,, | |
| யாம் | ,, | எம் | ,, | |
| நாங்கள் | ,, | எங்கள் | ,, | |
| நீ | ,, | உன், நின் | ,, | |
| நீர் | ,, | உம், நும் | ,, | |
| நீங்கள் | ,, | உங்கள் | ,, | திரியும். |

தன்மைப் பெயர்கள் வேறுபடும் விதம்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | யான் | நாம் | யாம் | நாங்கள் |
| 2. | என்னை | நம்மை | எம்மை | எங்களை |
| 3. | என்னால் | நம்மால் | எம்மால் | எங்களால் |
| 4. | எனக்கு | நமக்கு | எமக்கு | எங்களுக்கு |
| 5. | என்னின் | நம்மின் | எம்மின் | எங்களின் |
| 6. | எனது | நமது | எமது | எங்களது |
| 7. | என்னிடம் | நம்மிடம் | எம்மிடம் | எங்களிடம் |
| 8. | ——— | ——— | ——— | ——— |

முன்னிலைப் பெயர்கள் வேறுபடும் விதம்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | நீ | நீர் | நீர் | நீங்கள் |
| 2. | உன்னை | உம்மை | நும்மை | உங்களை |
| 3. | உன்னால் | உம்மால் | நும்மால் | உங்களால் |
| 4. | உனக்கு | உமக்கு | நுமக்கு | உங்களுக்கு |
| 5. | உன்னின் | உம்மின் | நும்மின் | உங்களின் |
| 6. | உனது | உமது | நுமது | உங்களது |
| 7. | உன்னிடம் | உம்மிடம் | நும்மிடம் | உங்களிடம் |
| 8. | ——— | ——— | ——— | ——— |

குறிப்பு:- (1) தன்மைப் பெயர்களும், முன்னிலைப் பெயர்களும் விளிக்கப்படா.

குறிப்பு:- (2) தான், தாம், என்பன இடப் பொதுப் பெயர்கள்.

நான் தான், நீ தான், அவள் தான், அது தான்.

இவைகள் வேற்றுமை உருபுகளை ஏற்கும்போது தான் என்பது தன் எனவும், தாம் என்பது தம் எனவும் திரியும்.

[அ] (1) தான், (2) தன்னை, (3) தன்னால், (4) தனக்கு, (5) தன்னின், (6) தனது, (7) தன்னிடம், (8) —

[ஆ] (1) தாம். (2) தம்மை, (3) தம்மால், (4) தமக்கு (5) தம்மின், (6) தமது, (7) தம்மிடம் (8) —

## 15—1. மகர ஈற்றுப் பெயர்கள்

உருபு ஏற்கும்போது அம் என்பது கெட அத்துச் சாரியை பெறும்.

(1) மரம், (2) மரத்தை, (3) மரத்தால் (4) மரத்துக்கு, (5) மரத்தின், (6) மரத்தினது, (7) மரத்தில், (8) மரமே!.

மரம்=மர்+அம்; மர்+அத்து+ஐ=மரத்தை.

## 15—2. அகர ஈற்றுப் பெயர்கள்

உருபு ஏற்கும்போது அற்றுச் சாரியை பெறும்.

பல+ஐ = பல+அற்று+ஐ+ = பலவற்றை.

சில+ஐ = சில+அற்று+ஐ+ = சிலவற்றை.

குறிப்பு:- 1. உயிர் எழுத்துக்குப்பின் உயிர் எழுத்து வந்தால் சில விடத்து யகர மெய்யும், சிலவிடத்து வகர மெய்யும் உடம்படு மெய்யாகத் தோன்றும்.

இ. மணி+அடி=மணியடி. பல+ஏடுகள்=பலவேடுகள்.

ஈ. தீ+ஊது=தீயூது ஆ+இன்=ஆவின்.

ஐ. பனை+ஓலை=பனையோலை திரு+ஏடு=திருவேடு.

குறிப்பு:- 2. அத்து, அற்று என்ற சாரியைகளின் உகரம் கெட்டது.

## 15—3. ஐயீற்றுப் பெயர்கள்

உருபு ஏற்கும்போது ஐ என்பது கெட அற்றுச் சாரியை பெறும்.

அவை+அற்று+ஐ = அவற்றை

எவை+அற்று+ஆல்= எவற்றால்

இவை+அற்று+கு = இவற்றுக்கு

## 15—4. எல்லாம் என்னும் பெயர்

உருபு ஏற்கும்போது மகர மெய்கெட அற்றுச் சாரியையும், உருபின் மேல் உம்மும் பெறும்.

எல்லாம்+அற்று+ஐ+உம் = எல்லாவற்றையும்

எல்லாம்+அற்று+ஆல்+உம்= எல்லாவற்றாலும்

## 16. பெயர்ச் சொற்களின் முடிபு

ஐந்தாம் வேற்றுமையின் எல்லைப் பொருள் உணர்த்தும் இன் உருபும், ஆறும் வேற்றுமை உருபுகளும் பெயர்ச்சொல் லைக் கொண்டும், மற்ற வேற்றுமைகள் பெரும்பாலும் வினைச் சொல்லைக் கொண்டும் முடியும்.

| | | | |
|---|---|---|---|
| 5-ம் வேற்றுமை. | | மதுரையின் வடக்கு திருச்சி. | பெயர் முடிபு |
| 6. | .... | கந்தனது வீடு. | .... |
| 1. | .... | பாலையா படிக்கிறான். | வினை முடிபு |
| 2. | .... | பாலையாவைக் கொண்டு வா. | .... |
| 3. | .... | பாலையாவால் பிடிபட்டான். | .... |
| 4. | .... | பாலையாவுக்குக் கொடு. | .... |
| 5. | ... | பாலையா விடத்திலிருந்து ஓடி விடு | .... |
| 7. | .... | பாலையாவின்கண் சேர். | .... |
| 8. | ... | பாலையாவே! ஓடி வா. | .... |

## 17. பெயர்ச்சொல்லின் இலக்கணம்

பெயர்ச்சொல்லுக்கு (1) வகை, (2 திணை, பால், எண், இடம், வேற்றுமை, (3) முடிபு கொடுத்து இலக்கணம் கூறவும்.

கோபால் பந்து அடிக்கிறான்.

1. கோபால்:– [1] பொருட்பெயர், [2] உயர்திணை, ஆண் பால், ஒருமை, படர்க்கை, முதலாம் வேற் றுமை [3] அடிக்கிறான் என்ற வினையின் எழு வாய்.

2. பந்து:– [1] பொருட்பெயர், [2] அஃறிணை, ஒன்றன் பால், ஒருமை, படர்க்கை, இரண்டாம் வேற் றுமை, [3] அடிக்கிறான் என்ற வினை முடிபு கொண்டது.

# IV. வினையியல்

## 18. வினைச்சொல்

பொருளின் தொழிலை உணர்த்தும் சொல். ஒரு வினையடியினின்று ஐவகை ரூபமுள்ள வினைகள் பிறக்கும்.

(உ-ம்) இராமன் நடக்கின். நடக்கிறான்—வினைமுற்று.

குறிப்பு:- நடக்கிறான் என்பது இராமனின் தொழிலாகிய நடத்தலையும், அத்தொழில் நிகழ் காலத்தில் நிகழ்கிறது என்பதை, அத்தொழிலைச் செய்வோனாகிய இராமனையும் உணர்த்தி வினைமுற்றாயிற்று.

தெரிநிலை வினைமுற்று செயலையும், காலத்தையும், செய்வோன் முதலியவைகளையும் உணர்த்துவது. செய்வோனே கர்த்தாவாம்.

அவ்வாறே (1) நடந்து, நடக்க, நடந்தால், (2) நடந்த, நடக்கிற, நடக்கும், (3) நடத்தல், நடை, நடக்கை, (4) நடந்தோன், நடந்தவன். முதலியன வினை ரூபங்கள் ஆயின.

## 19. வினைகளின் வகைகள்

வினைச்சொற்கள் உடன்பாட்டிலும், எதிர்மறையிலும் தொழிலை உணர்த்தும் தெரிநிலை வினை, குறிப்பு வினை என இரு வகைப்படும்.

### 19—1. தெரிநிலை வினை

காலத்தை வெளிப்படையாய் உணர்த்தும் வினை.

நடந்தேன், நடக்கிறேன், நடப்பேன், நடவேன்.

### 19—2. குறிப்பு வினை

குறிப்பாய்க் காலத்தை உணர்த்தும் வினை.

நல்லவன், நல்லது, சிறியது, நல்லவனல்லன்

காலக்குறிப்பு மொழிகள்:— முன், இன்று, இனி.

## 19—3. உடன்பாட்டு வினை

தொழில் நிகழ்ச்சிக்கு அதன் கர்த்தா உடன்படுவதை உணர்த்துவது.

நடந்தேன், படிக்கிறேன், செய்வேன்

## 19—4. எதிர்மறை வினை

தொழில் நிகழ்ச்சிக்கு அதன் கர்த்தா எதிர் மறுப்பதை உணர்த்துவது.

நடந்திலேன், படிக்கின்றிலேன், செய்யேன்.

## 20. காலம்

தொழில் நிகழ்ச்சியின் வேளையை உணர்த்துவது. அது இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம், என மூவகைப்படும். காலம் இடைநிலைகளால் உணர்த்தப்படும்.

## 20—1. இறந்த காலம்

தொழில் நடந்துவிட்ட காலம். த், ட், ற், இன், என்பன இறந்தகால இடைநிலைகள்.

| வினை. | பகுதி. | இடைநிலை. | விகுதி. |
|---|---|---|---|
| 1. செய்தான் | செய் | த் | ஆன் |
| 2. உண்டாள் | உண் | ட் | ஆள் |
| 3. சென்றோம் | செல் | ற் | ஓம் |
| 4. ஓடினார் | ஓடு | இன் | ஆர் |

குறிப்பு:-1. 3-ல் லகரமெய் னகர மெய்யானதும், 4-ல் உகரம் கெட்டதும் சந்தி.

2. இடைநிலை விகுதியோடு பொருந்தும்.

## 20—2. நிகழ் காலம்

தொழில் நடந்தேறுகிற காலம். கிறு, கின்று, என்பன நிகழ்கால இடைநிலைகள்.

| | | | |
|---|---|---|---|
| உண்கிறேன் | உண் | கிறு | ஏன் |
| செய்கின்றான் | செய் | கின்று | ஆன் |

## 20—3. எதிர் காலம்

தொழில் நடக்கும் காலம். ப், வ் என்பன எதிர்கால இடைநிலைகள்.

| | | | |
|---|---|---|---|
| தின்பான் | தின் | ப் | ஆன் |
| ஓடுவார் | ஓடு | வ் | ஆர் |

குறிப்பு:- இ, அ, ஆல், உம், விகுதிகள் தாமே காலத்தை உணர்த்துகின்றன.

| இறந்தகாலம். | நிகழ்காலம். | எதிர்காலம். |
|---|---|---|
| ஓடி | ஓட | ஓடும் |
| விலக்கி | விலக்க | விலக்கினால் |

## 20—4. பகுதி, இடைநிலை, விகுதி.

1. பகுதி:- வினைச்சொல்லின் முதலில் பகாப்பதமாக நிற்கும் ஏவல் வினைமுற்று,

(உ-ம்) நட, வா, போ, இரு, செய்.

2 இடைநிலை:- பகுதிக்கும், விகுதிக்கும் இடையில் காலத்தை உணர்த்தும்படி நிற்கும் இடைச்சொல்.

(உ-ம்) த், ட், ற், இன், கிறு, கின்று, ப், வ்.

3. விகுதி:- வினைச்சொல்லின் ஈற்றில் நிற்கும் இடைச்சொல்.

(உ-ம்) ஏன், ஓம், ஆய், ஈர், அன், ஆன், அள், ஆள், அர், ஆர், து, று, உ, ய், ஆய், அ, ஆல், தல், அல்.

| வினைச்சொல் | விகுதி | வினைச்சொல் | விகுதி |
|---|---|---|---|
| வந்து | உ | வந்தேன் | ஏன் |
| வந்தன | அ | வந்தனன் | அன் |
| வரல் | அல் | வந்தனள் | அள் |

## 21. வேறு வினை வகைகள்

தெரிநிலை வினைகள் தன்வினை, பிறவினை என்றும்; செயப்படுபொருள் குன்றிய வினை, செயப்படுபொருள் குன்றா வினை என்றும்; செய்வினை, செயப்பாட்டு வினை என்றும்; ஏவல் வினை, வியங்கோள் வினை என்றும் வகுக்கப்படும்.

குறிப்பு:- ஏவல்வினை முன்னிலை இடத்திலும், மற்ற வினைகள் மூவிடம் ஐம்பால்களிலும் தொழில் உணர்த்தும்.

| | உடன்பாடு. | எதிர்மறை. |
|---|---|---|
| தன்வினை | படித்தான் | படித்திலன் |
| பிறவினை | படிப்பித்தான் | படிப்பித்திலன் |
| செய்வினை | அடித்தார் | அடித்திலர் |
| செயப்பாட்டு வினை | அடிபட்டார் | அடிபட்டிலர் |
| செயப்படுபொருள் குன்றிய வினை | சிரித்தாய் | சிரித்திலாய் |
| செயப்படுபொருள் குன்றா வினை | கொடுத்தோம் | கொடுத்திலோம் |

ஏவல் வினை:- கட்டளை கொடுக்கும் வினை.

| | | | |
|---|---|---|---|
| வா, | வம்மின், | வாரேல், | வாரன்மின். |
| நட, | நடமின், | நடவேல், | நடவன்மின். |

வியங்கோள் வினை:- மரியாதையாய் ஏவும் வினை.

எழுதுக, வருக | எழுதற்க, வரற்க.

குறிப்பு.- ஏவல், வியங்கோள் வினை முற்றுக்கள் எதிர் காலத்தை உணர்த்தும்.

## 22. வினை முற்றுக்களின் விகுதிகள்

வினை முற்றுக்களின் ஈற்றில் நிற்கும் விகுதிகள் பெயர்ச் சொல்லைப்போல் திணை, பால், எண், இடம் உணர்த்தும், ஆனால் வேற்றுமையை உணர்த்தா. (வினைமுற்று கர்த்தாவை உணர்த்தும்.)

| | வினைமுற்று விகுதி. | வினைமுற்று. |
|---|---|---|
| 1. தன்மை ஒருமை | என் | வந்தேன் |
| 2. தன்மைப் பன்மை | ஓம் | வந்தோம் |
| 3. முன்னிலை ஒருமை | ஆய் | வந்தாய் |
| 4. முன்னிலைப் பன்மை | ஈர் | வந்தீர் |
| 5. படர்க்கை ஆண்பால் | அன், ஆன் | வந்தனன் |
| 6. படர்க்கைப் பெண்பால் | அள், ஆள் | வந்தனள் |
| 7. படர்க்கைப் பலர்பால் | அர், ஆர் | வந்தனர் |
| 8. படர்க்கை ஒன்றன்பால் | து, று | வந்தது |
| 9. படர்க்கைப் பலவின்பால் | அ | வந்தன |

## அப்பியாசம். 16.

வினைமுற்றின் திணை, பால், எண், இடம் தெரிவி.

அறுத்தார்கள், படர்ந்தது, நடுகிறான், வளர்கின்றன, பாடினான், ஒடிந்தன, வந்தேன், நடக்கிறாய்.

## 23. எச்சவினை

விகுதியினால் திணை, பால், எண், இடம் உணர்த்தாத வினை. அது பெயரெச்சம், வினையெச்சம் என இருவகைப் படும். எச்சவினைகள் காலத்தை உணர்த்தும், கர்த்தாவை யோ உணர்த்தா.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயரெச்சம்:— | வந்த | வருகிற | வரும் | வாராத |
| வினையெச்சம்:— | வந்து | வர | வந்தால் | வாராமல் |

## 23—1. பெயரெச்சம்

பெயரைக்கொண்டு முடிபு பெறும் வினை. அ, உம், என்பன உடன்பாட்டுப் பெயரெச்ச விகுதிகள். ஆ, என்பது எதிர்மறையை உணர்த்தும் விகுதி.

| | | | |
|---|---|---|---|
| செய்த | செய்கிற | செய்யும் | செய்யாத |
| உண்ட | உண்கிற | உண்ணும் | உண்ணாத |

## 23—2 வினையெச்சம்

வேறொரு வினையைக்கொண்டு முடிபு பெறும் வினை.

உ, இ, ய், ஆய் என்பன இறந்தகாலத்தையும், அ என்பது நிகழ்காலத்தையும், இன், ஆல், கால், எதிர்காலத்தையும் உடன் பாட்டிலும்; ஆமல், ஆது, ஆமே எதிர்மறையிலும் உணர்த்தும் வினையெச்ச விகுதிகள்.

| | | | |
|---|---|---|---|
| செய்து | செய்ய | செய்தால் | செய்யாமல் |
| உண்டு | உண்ண | உண்டால் | உண்ணாது |
| போய் | போக | போனால் | போகாமல் |

### தெரிநிலைப் பெயரெச்சம் வரும்விதம்

| பகுதி | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் | எதிர்மறை |
|---|---|---|---|---|
| படி | படித்த | படிக்கிற | படிக்கும் | படியாத |
| செய் | செய்த | செய்கின்ற | செய்யும் | செய்யாத |
| போ | போன | போகின்ற | போகும் | போகாத |
| எண்ணு | எண்ணின | எண்ணுகிற | எண்ணும் | எண்ணாத |
| ஓடு | ஓடின | ஓடுகின்ற | ஓடும் | ஓடாத |
| காண் | கண்ட | காண்கிற | காணும் | காணாத |

குறிப்புப்பெயரெச்சம், நல்ல, தீய, இனிய, இனியதல்லாத,

### தெரிநிலை வினையெச்சம்

| பகுதி | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் | எதிர்மறை |
|---|---|---|---|---|
| படி | படித்து | படிக்க | படித்தால் | படியாமல் |
| செய் | செய்து | செய்ய | செய்யின் | செய்யாது |
| போ | போய் | போக | போனால் | போகாமல் |
| எண்ணு | எண்ணி | எண்ண | எண்ணின் | எண்ணாவிடில் |
| ஓடு | ஓடி | ஓட | ஓடினால் | ஓடாது |
| காண் | கண்டு | காண | கண்டால் | காணாவிடில் |

குறிப்பு வினையெச்சம். மெல்லப்பேசினான் இதில் மெல்ல.
பைய நடந்தாள். ... பைய.
வலியக்கொடுத்தான். ... வலிய.

### அப்பியாசம் 17.

பகுபத இலக்கணம் கூறு

கொண்டான், செல்வார், நடந்தார்கள், ஓடுகின்றது, இருக்கின்றன, படித்தாள், பாடினோம், செய்வான், ஓடிற்று, வந்தது, வளரும், எழுதுகின்றனள்.

### அப்பியாசம் 18.

முக்காலங்களிலும் தெரிநிலை வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சம் உண்டாக்கு.

நட, போ, தா, எடு, காண், தின்னு, பார், தடு.

24. தொழிற்பெயர்; வினையாலணையும் பெயர்.

( 11—ல், 3ம், 4—ம் பிரிவுகளைப்பார்க்க. )

## V. இடையியல்

### 25 இடைச்சொல்

தனித்து வாராமல் பெயர் வினைகளின் இடையில்வருஞ் சொல். அவையாவன :—

| | | | |
|---|---|---|---|
| 1. | வேற்றுமை உருபுகள், | மரத்தை நடு, | ஐ |
| 2. | விகுதிகள், | போகின்றனன், | அன் |
| 3. | காலஇடை நிலைகள், | செய்தாள், | த் |
| 4. | சாரியைகள் | பணத்தைத் தேடு, | அத்து |
| 5. | உவமை உருபுகள், | பூனையைப்போல் பாய்ந்து | போல |
| 6. | சுட்டெழுத்துக்கள், | அம்மரங்கள், | அ |
| 7. | வினவெழுத்துக்கள் | எவன் பேசினன்? | எ |

## VI உரியியல்.

### 26. உரிச்சொல்

பெயர் வினைகளின் பண்பை உணர்த்தி அவைகளைத் தழுவி வருஞ்சொல். அது பெயருரிச்சொல், வினையுரிச் சொல் என இரு வகைப்படும்.

1. சாலப் பெரியோர். சால, பெயருரி.

சால என்பது பெரியோர் என்ற பெயரைத்தழுவி அதன் பண்பை உணர்த்திப் பெயருரியாயிற்று.

2. சால உழைத்தான். சால வினையுரி.

சால என்பது உழைத்தான் என்ற வினையைத் தழுவி அதன் பண்பை உணர்த்தி வினையுரியாயிற்று.

220418

## VII. சொற்றொடரியல்

### 27. சொற்றொடர்

சொற்கள் ஒன்றின் பின் ஒன்றாய் இலக்கண அமைதிப் படி தொடர்ந்துவந்து பொருள் கொடுப்பது அது முற்றுப் பெற்ற சொற்றொடர், முற்றுப்பெறாத சொற்றொடர் என இரு வகைப்படும். முற்றுப்பெற்ற சொற்றொடர் வாக்கியமாகும்.

1. தேர் வடக்கு இரதவீதியில் நிற்கிறது. வாக்கியம்
2. வடக்கு இரதவீதியில் முற்றுப்பெறாத சொற்றொடர்.

### 28. வாக்கியம்

பொருள் முற்றுப்பெற்ற சொற்றொடர் ஒரு வாக்கியத்தில் கர்த்தா, தொழில் முடிபு ஆகியஇரண்டும் தொழிலை அடையும் பொருளோடும், பொருள் இல்லாமலும் இலக்கண அமைதிப்படி தொடர்ந்துவரும். இவைகள் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் எனப்படும்

1. நான் போகிறேன். இதில் நான்-எழுவாய்; போகிறேன்-பயனிலை.
2. இராமன் புத்தகம் தைக்கிறான். என்பதில் இராமன்...எழுவாய்; தைக்கிறான்...பயனிலை; புத்தகம்...செயப்படுபொருள்.

### 28—1. எழுவாய்

வாக்கியம் உண்டாகிற இடம். எழு+வாய். எழு—எழுகிற, வாய்—இடம். எழுவாய்இன்றி வாக்கியம் உண்டாகாத

படியால், அதுவே வாக்கியத்தில் மூலமான சொல்லாகும். எழுவாயானது கர்த்தா, செய்பவன் எனவும் படும்.

## 28—2 பயனிலை

கர்த்தாவின் தொழில் முடிவு நிற்கும் சொல். பயன்=முடிபு. நிலை=நிற்கும் இடம், *பயனிலை வாக்கியத்தின் ஈற்றில் நிற்கும் வினைமுற்ருக அல்லது பெயராக இருக்கும்.

1. இராமன் நடந்து வந்தான். வந்தான் வினைப்பயனிலை. நடந்து என்ற வினை தொழில் முடிவை உணர்த்தாதலால் அது பயனிலை அல்ல.

வந்தான் என்ற வினை தொழில் முடிவை உணர்த்திப் பயனிலை ஆயிற்று

2. இவர் நமது அரசன், அரசன் பெயர்ப் பயனிலை

## 28—3. செயப்படுபொருள்

கர்த்தாவின் தொழிலை அடையும் பொருளும், அத்தொழிலால் உண்டாகும் பொருளுமாம்.

(உ-ம்) இராமன் புத்தகத்தைத் திறந்தான்.
தச்சன் பேட்டி செய்கிருன்.

கர்த்தாவின் தொழிலை அடையும் பொருள் புத்தகமும், பெட்டியும். ஆகையால் புத்தகம், பெட்டி செயப்படுபொருள்கள்.

## 28—4. தோன்ருஎழுவாய்

வாக்கியத்தில் வெளிப்படத் தோன்ருமல் நிற்கும் எழுவாய்.

| | | |
|---|---|---|
| சீக்கிரம் வீட்டிற்குப் போ. | நீ, | எழுவாய். |
| என்னேடு விரைவாய் நடவுங்கள். | நீங்கள் | ,, |
| பரீக்ஷையில் தேறிவிட்டான். | அவன் | ,, |

ஏவல் வினைமுற்றுக்களுக்கு முன்னிலைப் பெயர்களும், மற்ற வினை முற்றுக்களுக்கு அதன் ஈற்றினால் உணர்த்தப்படும் மூவிடம் ஐம்பால் பெயர்களும் தொக்கு நிற்கும்.

## 28—5. பெயர்ப்பயனிலை

பெயர்ச்சொல்லே வினைமுற்று நிற்கும் இடத்தில் நின்று வினைப்பொருளைக் கொடுப்பது.

| | | |
|---|---|---|
| இந்தியா நமது தேசம். | தேசம் | பெ. பயனிலை |
| அவர் எங்கள் உபகாரி. | உபகாரி | பெ. பயனிலை |

## 29. எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்

### கண்டுகொள்ளும் விதம்.

1. பயனிலை. வாக்கியத்தின் ஈற்றில் நிற்கும் வினைமுற்றைப் பயனிலையாக முதலாவது எழுது.

2. எழுவாய். பயனிலைக்கு முன் யார், எது, எவை என்னும் வினாச்சொற்களில் திணைக்குப்பொருத்தமான ஒன்றை வைத்துக்கேள்வி கேட்க வரும் விடையே எழுவாயாம்.

3. செயப்படுபொருள். பயனிலைக்கு முன் இரண்டாம் வேற்றுமையை அடைந்த வினாச்சொற்களான யாரை, எதை, எவைகளை என்ற வினாச்சொற்களில் திணைக்குப்பொருத்தமான ஒன்றை வைத்துக்கேள்வி கேட்க வரும் விடையே செயப்படு பொருளாகும்.

### உதாரணம்.

1. நேற்று இரவில் நாய்கள் ஓய்வில்லாமல் குரைத்தன.
2. மேய்ப்பன் ஆடுமாடுகளை வயல் வெளிகளில் மேய்க்கிறான்.
3. ஹர்ஷ மன்னன் சனங்களுடைய சௌகரியத்திற்காக அநேக சத்திரங்களைக் கட்டினான்.
4. தினந்தோறும் பள்ளிக்கூடத்திற்கு வா.
5. சப்மரீன் கப்பல் மற்றவர்கள் பார்வைக்குத் தென்படாது.
6. மரங்களை அவசியமின்றி வெட்டிவிட்டார்கள்.

| நிர் | கேள்வி கேட்கும் விதம் | எழுவாய் | பயனிலை | செயப்படு பொருள் |
|---|---|---|---|---|
| 1 | 1. எவை குரைத்தன?<br>2. (பயன் அற்ற கேள்வியாகும்) | நாய்கள் | குரைத்தன | —— |
| 2 | 1. யார் மேய்க்கிறான்?<br>2. எவைகளை மேய்க்கிறான்? | மேய்ப்பன் | மேய்க்கிறா [ன் | ஆடு, மாடு [களை |
| 3 | 1. யார் கட்டினான்?<br>2. எவைகளைக் கட்டினான்? | ஹர்ஷமன் [னன் | கட்டினான் | சத்திரங்க [ளை |
| 4 | 1. யார் வரவேண்டும்?<br>2. ———— | நீ(தோ. எ) | வா | —— |
| 5 | 1. எது தென்படாது?<br>2. ———— | சப்மரின் [கப்பல் | தென்படா [து | —— |
| 6 | 1. யார் வெட்டிவிட்டார்கள்?<br>2. எவைகளை வெட்டிவிட்டார் [கள்? | அவர்கள் | வெட்டி வி [ட்டார்கள் | மரங்களை |

குறிப்பு. சில வேளைகளில் ஒரேபயனிலைக்குப் பல எழுவாய்களும், பல செயப்படுபொருள்களும் வருதல் உண்டு.

(உ-ம்) 1. நானும் என் சிநேகிதனும் கடற்கரையில் சிப்பிகளும், கடற் பஞ்சுகளும் எடுத்தோம்.

நான், சிநேகிதன்-எழுவாய் சிப்பிகள், பஞ்சுகள்-செயப்படுபொருள்

2. தகப்பனும், மகனும் கங்கை நதியில் ஸ்நானம் செய்தனர். தகப்பன், மகன்-எழுவாய்

## 30. அடைமொழி

பெயர், வினைகளை அடுத்து வந்து அதன் பண்பை விசேஷித்துக்காட்டும் மொழி.

| | |
|---|---|
| கல் வீடு—பொருள்பற்றி | வந்தது. |
| மலை அரசன்—இடம்பற்றி | ,, |
| கார்ப்பயிர்—காலம் பற்றி | ,, |
| கோடி அவரை—சினை பற்றி | ,, |
| சேந்தாமரை—குணம் பற்றி | ,, |

கோடைக்கூலி—தொழில் பற்றி வந்தது
நல்லபையன்—குறிப்புப்பெயரெச்சம் ,,
ஒழுங்காகச்செய்—வினையெச்சம் பற்றி ,,

குறிப்பு. அடைமொழிகளை எ. ப. செய. ஓடு சேர்த்து எழுது.

### அப்பியாசம் 19.

எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் கண்டுபிடி.

1. நாள்தோறும் ஓடியாடி மச்சங்களைப் பிடிப்பீர்.
2. நேற்று மாலையில் பந்து விளையாடினேன்.
3. மகனே! தாகத்தினால் நாக்கு வறட்சி அடைகிறது.
4. ரப்பர் என்னும் பொருள் ஒருவகை மரத்தின் பால்.
5. வாந்திபேதி என்பது ஒரு தொத்து வியாதி.
6. தசரதன் தண்ணீர் அருந்தி, களை தீர்ந்து கரைமேல் உட்கார்ந்தான்.
7. பனை ஓலை வட்டமாயும் அகலமாயும் இருக்கும்.
8. கால்நடைகளை நாம் அன்பாய் நடத்திக் கருத்துடன் பாதுகாக்க வேண்டும்
9. செல்வம் விருத்தியாக ஒவ்வொரு மனிதனும் யாதேனும் ஒரு தொழிலைச் செய்கிறான்.
10. இரத்தம் சிவப்பு நிறமுள்ள நீர் போன்ற ஒரு வஸ்து.

## 31. வாக்கியங்களின் பயன்கள்

உடன்பாட்டிலும் எதிர்மறையிலும் வாக்கியமானது அறிவிப்பு, வினா, ஏவல், வியங்கோள், வியப்பு என்பனவைகளில் ஒன்றை உணர்த்தும்.

1. எ. மொக்காக் காப்பிக் கொட்டை நீலம் கலந்த வெண்மை நிறமாய் இருக்கும். அறிவிப்பு
   பி. கள்ளர்கள் இங்கு வந்திலர். அறிவிப்பு
2. எ. கந்தன் நன்றாய்ப் படிக்கிறானா? வினா
   பி. கந்தன் நன்றாய்ப் படியானோ? வினா

3\. எ. உங்கள் உவர் நிலங்களைப் பண்படுத்துங்கள் ஏவல்
பி. பாம்பொடு பழகேல். ஏவல்

4\. எ. எப்போதும் நன்றாய் எழுதுக வியங்கோள்
பி. அசதியாய் இராற்க. வியங்கோள்

5\. முட்செடி வேகாதது என்ன! வியப்பு

## அப்பியாசம் 20.

உடன்பாட்டை எதிர்மறையாக்கு.

உ. தவளைகள் நீரில் நீந்திச் செல்கின்றன.
எ. தவளைகள் நீரில் நீந்திச் செல்கின்றில.

1. நாம் ஒரு பட்டுக்கூட்டைப் பார்க்கிறோம்.
2. இதைச் சரியென்று ஒப்புக்கொள்வது தகுதி.
3. காப்பியிலே மிக்கப்பசுமை நிறமாய் இருக்கும்.
4. அயோத்தியில் ஓர் அரசன் அரசு புரிந்தான்.
5. பிள்ளைகள் நன்றாய்ப் படிக்கிறார்கள்.

# VIII. புணரியல்

## 32. புணர்ச்சி

நிலைமொழி ஈறும் வருமொழி முதலும் ஒன்றுபட்டுப் பொருந்துவது. அது இயல்பு புணர்ச்சி, விகாரப் புணர்ச்சி என இருவகையாம்.

### 32—1. இயல்பு புணர்ச்சி

நிலைமொழி ஈறும் வருமொழி முதலும் விகாரமின்றிப் பொருந்துவது.

நிலைமொழி + வருமொழி = தொடர்மொழி
பொன் + மணி = பொன்மணி
பால் + ஆடை = பாலாடை

சூத்திரம். உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே.

## 32—2. விகாரப்புணர்ச்சி

நிலைமொழிஈறும் வருமொழி முதலும் விகாரத்துடன் பொருந்துவது. அது தோன்றல், திரிதல், கெடுதல் என்னும் விகாரங்களை அடையும்.

### 1 தோன்றல் விகாரம்.

இதில் எழுத்தாவது சாரியையாவது தோன்றும்.

வாழை + பழம் = வாழைப்பழம் ப் தோன்றல்.
புளி + பழம் = புளியம்பழம் அம் சாரியை.

### 2. திரிதல் விகாரம்.

இதில் நிலைமொழியின் ஈறாவது வருமொழியின் முதலாவது அல்லது இரண்டுமாவது திரியும்.

கல் + சட்டி = கற்சட்டி நிலைமொழி ஈறுதிரிந்தது.
கண் + நீர் = கண்ணீர் வருமொழிமுதல் திரிந்தது
கல் + தூண் = கற்றூண் இரண்டும் திரிந்தன.

2. ஒன்று என்ற எண்பெயர் வருமொழி முதலில் உயிர்வரின் ஓர் என்றும் மெய்வரின் ஒரு என்றும் திரியும்.

ஒன்று + அன்னம் = ஓர் அன்னம்
ஒன்று + மரம் = ஒரு மரம்

### 3 கெடுதல் விகாரம்.

இதில் நிலைமொழியின் ஈற்று எழுத்துக் கெடும்.

மரம் + நாய் = மரநாய் மகரமெய் கெட்டது

## 33. உயிர் ஈற்றுப்புணர்ச்சி

நிலை மொழியின் உயிர் எழுத்தும், அதன் ஈற்று உயிர் மெய் எழுத்தும் வருமொழியோடு புணரும் விதமாம்.

குறிப்பு உயிர் மெய்யின் ஈற்றெழுத்து உயிராகும்.

(உ-ம்) எ + அணில் = மலை + எலி =

வருமொழி முதல் உயிர்எழுத்து வருதல்.

**33—1.** சுட்டெழுத்துக்குப் பின்னும் எகரவினாவெழுத்துக்குப் பின்னும் உயிர்வரின் வகரமெய் தோன்றும்.

அ + அணில் = அவ்வணில்
இ + ஆண்டு = இவ்வாண்டு
உ + ஆடு = உவ்வாடு
எ + உயிர் = எவ்வுயிர்

**33-2.** அ, ஆ, உ, ஊ, ஒ, ஓ, ஔ, என்ற உயிர்களுக்குப் பின் உயிர்வரின் வகரமெய் தோன்றும்

பல + உயிர் = பலவுயிர்
நிலா + எது = நிலா வெது
திரு + அருள் = திருவருள்
பூ + உடன் = பூவுடன்
நொ + அழகு = நொவ்வழகு
கோ + என்று = கோவென்று
கௌ + அழகு = கௌவழகு

**33—3.** இ, ஈ, ஐ என்ற உயிர்களுக்குப்பின் உயிர்வரின் யகரமெய் தோன்றும்.

கலி + உலகம் = கலியுலகம்
தீ + ஆவி = தீயாவி
புகை + இலை = புகையிலை

**34.** வருமொழி முதலில் க், ச், த், ப் மெய்கள் மிகும் இடம்.

குறிப்பு:- வல்லின வரிசையில் க், ச், த், ப் மெய்கள் மொழிக்கு முதலில் வரும்.

**34—1.** சுட்டுக்கும் எகர வினவுக்குப் பின்னும், அந்த, இந்த, எந்த என்னும் சுட்டுத்திரிபு, வினத்திரிபுகளுக்குப் பின்னும் க, ச, த, ப, மெய் மிகும்.

அ + கடல் = அக்கடல் அந்த + கடல் = அந்தக்கடல்
இ + சட்டை = இச்சட்டை இந்த + சட்டை = இந்தச்சட்டை
உ + தவளை = உத்தவளை எந்த + தேசம் = எந்தத்தேசம்
எ + பையன் = எப்பையன் எந்த + பையன் = எந்தப்பையன்

**34—2.** இரண்டாம் வேற்றுமை விரிக்குப்பின் க, ச, த, ப, மெய் மிகும்.

படத்தை + காட்டு = படத்தைக்காட்டு.
பணத்தை + சேர் = பணத்தைச்சேர்.
கண்ணை + தொடு = கண்ணைத் தொடு.
பூவை + பிடுங்கு = பூவைப் பிடுங்கு.

## 34—3. நான்காம் வேற்றுமை விரிக்குப்பின் க, ச, த, ப, மெய் மிகும்.

இராமனுக்கு + கொடு = இராமனுக்குக் கொடு.
எனக்கு + சொல் = எனக்குச் சொல்.
கந்தனுக்கு + தா = கந்தனுக்குத்தா
உனக்கு + போதும் = உனக்குப்போதும்.

## 35. நிலைமொழி ஈற்று மெய் புணரும் விதம்.

குறிப்பு. வருமொழியில் உயிர்எழுத்தும், மெய்எழுத்தும் நிற்கும்.

மண் + ஆசை = தண் + நீர் = ந் + ஈ = நீ

## 35—1. தனிக்குறில் அணைந்த மெய்யின்பின் உயிர்வரின் அந்தமெய் இரட்டிக்கும்.

கல் + உள்ள = கல்லுள்ள கல்ல்
மண் + ஆசை = மண்ணாசை மண்ண்
பொன் + ஆடை = பொன்னாடை பொன்ன்

## 35—2. மகர மெய்யின்பின் க, ச, த, மெய் வரின் மகரமெய் அவற்றின் இனவெழுத்தாகத் திரியும்.

சினம் + கொள்ளாதே சினங் கொள்ளாதே.
அறம் + செய் அறஞ்செய்.
தினம் + தோறும் தினந்தோறும்.

முற்றிற்று.

## றகர, ரகர பேதம்

அறம்...தருமம்
அரம்...ஆயுதம்
அறி...அறிவடை
அரி...வெட்டு
அறை...கட்டடம், அடி
அரை...பாதி, இடுப்பு
ஆற...தணிய
ஆர...நிறைய
இறக்கம்...தணிவு
இரக்கம்...உருக்கம்
இறந்து...மரித்து
இரந்து...யாசித்து
இறை...வரி, அரசன்
இரை...ஆகாரம், ஒலி
உறை...பை
உரை...சொல்
உறி...உள்ளேவாங்கு
உரி...அரைப்படி
மரப்பட்டை
ஊற...சுரக்க
ஊர...நகர
எறி...வீசு
எரி...தீ, நரகம்
ஏறி...மேலேபோய்
ஏரி...குளம்
கறி...ஆணம், மாம்சம்
கரி...சாக்ஷி, யானை
கறை...குற்றம், வடு
கரை...ஓரம், கரைத்தல்
கீறி...பிளந்து
கீரி...நகுலம்
குறை...குற்றம்
குரை...குரைத்தல்
கூறல்...சொல்லுதல்
கூரல்...ஒருமீன்
கோறை...பொந்து
கோரை...ஒருபுல்
சிறை...அடிமை
சிரை...சிரைத்தல்
சொறி...குட்டம், தினவு
சொரி...உதிரச்செய்
தறி...வெட்டு, தறிமரம்
தரி...உடு, அணி
திறை...வரி
திரை...அலை; படுதா
துறை...இடம்; துறைமுகம்
துரை...அதிகாரி
தெறி...தெறித்தல்
தெரி...அறிந்துகொள்
தேறி...தேறுதல்அடைந்து
தேரி...மணல்திட்டை
நிறை...அளவு, மாட்சிமை
நிரை...ஒழுங்கு, படைவகுப்பு
நெறி...வழி; முறைமை
நெரி...புடவை; முரிப்பு
பறவை...புள், பக்ஷி
பரவை...கடல்
புறம்...பக்கம்
புரம்...ஊர்

பொறி...கருவி; தீப்பொறி
பொரி...நெற்பொரி, வேவி
பொறு...தாமதி
பொரு...சண்டையிடு
மறம்...கோபம்
மரம்...மரவர்க்கம்
மறி...பெண்குட்டி, வழிமறித்தல்
மரி...செத்துப்போதல்
மாறி...வேறுபாடுஅடைந்து
மாரி...மழை
விறை...முறைப்பாதல்
விரை...வித்து; வாசனை

---

## ழகர, ளகர பேதம்

அழகு...சௌந்திரியம்
அளகு—பெண்புள்
அழி...கெடு
அளி...கொடு
ஆழி...கடல்
ஆளி...ஆள்வோன்
இழை...ஆபரணம்
இளை...இலக்குமி
உழவு...படைச்சால்; உழுதல்
உளவு...ஒற்று; வேவு
ஊழி...யுகம்; பசாசு
ஊளி...ஒருமீன்
ஒழி...நீக்கு
ஒளி...வெளிச்சம்
கழி...உப்பளம்; நீக்கு
களி--கள்; மயக்கம்;சந்தோஷப்படு
தழை...இலை
தளை...கட்டு
கழை...கரும்பு; மூங்கில்
களை...அழகு;புல்;நீக்கு;அயர்வு
கிழி...துண்டுதுண்டாக்கு
கிளி...ஒரு பறவை
குழவி...இளமை,அம்மிக்குழவி
குளவி...தேனீ; வண்டு
குழி...கிடங்கு; வயிறு
குளி...குளித்தல்
கோழி...ஒருபுள்
கோளி...பூவாதுகாய்க்கும்மரம்
சழி...சப்பளி
சளி...கோழை
சுழி...நீர்ச்சுழி; மூர்க்கம்
சுளி...புளியாரைச்செடி
சோழம்...சோழதேயம்
சோளம்...ஒருபயிர்
தழம்...தயிலம்
தளம்...வீட்டின் தளம்;படை

தாழ்...திரவுகோல்
தாள்...பூட்டு
தோழி...சிநேகிதி
தோளி...அவுரி
நாழி...உட்டுளைப்பொருள்
நாளி...நாய்; கள்
பீழை...துன்பம்
பீளை...கண்ணழுக்கு;

மூழை...அகப்பை
மூளை...தலைமூளை
வழி...பாதை
வளி...சூறைக்காற்று
வாழை...கதலி
வாளை...ஒருமீன்
விழி...கண்
விளி...அழை

---

அருணோதயம் பிரஸ், வண்ணார்பேட்டை. 1932

# பரீக்ஷை வினாக்கள்.—5-ம் வகுப்பு.

1. ஊ, நோ, ணி, தீ, செ, போ, கோ, இவைகளின் முதல் எழுத்து என்ன?

2. பண்புப்பெயர், வினையாலணையும் பெயர் என்றால் என்ன? ஒவ்வொன்றுக்கும் நான்கு உதாரணம் கொடு.

3. யானை, கொக்கு, குளம், சில இவைகளுக்கு எட்டு வேற்றுமையும் கூறு.

4. இந்திரன் இங்கு வந்தான். கன்றுவெளியில் ஓடிற்று. எழுவாய்களுக்கு இலக்கணம் கூறு.

5. தெரிநிலை வினைக்கும் குறிப்பு வினைக்கும் வித்தியாசம் என்ன? தெரிநிலை வினைமுற்றின் முக்கியபாகங்கள் எவை?

6. பெயரெச்சம், வினையெச்சங்களின் வித்தியாசம் என்ன? ஒற்றுமை என்ன? இவைகளுக்கும் வினைமுற்றுக்களுக்கும் வித்தியாசம் என்ன?

7. பெயர்ப்பயனிலை, தோன்றா எழுவாய், அடைமொழிகள் எவை? உதாரணம் கொடு.

8. எவ்வெழுத்துக்களுக்குப் பின் யகர உடம்படுமெய்யும் தோன்றும்.

9. க, ச, த, ப, மெய்கள் மிகும் நான்கு இடங்கள் எவை?

10. பிரித்துக்காட்டி விதி கூறு. பொன்னாசை, இலையுடன், பூவெடுத்தான்.

# திருத்தமும், குறிப்புகளும்—II.

3—3. பிழை-எழுத்து, திருத்-எழுத்து.

4—1. வலிய-வல்லமையான

4—2. மெல்லிய-மென்மையான

10-3. பிழை-மணி; திருத்-நாழிகை, பொழுது

11—2. பண்பு—குணம், தன்மை.

11—4. வினையாலணையும் பெயர், வினைமுற்றே பெயராய் வழங்குவது.

தோள் கண்டார். தோளே கண்டார்.

அருள் பெற்றார் அனைத்தையும் பெற்றார்.

கடையிடத்துக் கண்டார், பெற்றார் என்பன வினைமுற்றுக்கள். முதல் இடத்துக் கண்டார், பெற்றார் என்பன வினையாலணையும் பெயர்கள்.

11—4. (உ-ம்) 1 பிழை-பெற்றேமை; திருத்-பெற்றோமை திணை—என்பது குலம். அதாவது ஒரே இன வகையைச் சேர்ந்த தொகுதி.

12-3. பிழை-மனுஷர்; திருத்-மனிதர்

ஆர்-விகுதி நல்லார், தீயார்.

12—4. படர்க்கை—தன்மை, முன்னிலை இடப் பெயர்களை உணர்த்தாமல் அவைகளை விட்டுப் படர்ந்து செல்லும் பெயர்கள் படர்க்கை இடம். (உ-ம்) அவன், மரம், பூமி.

13. வேற்றுமை, பெயர்ப்பொருளை வேறுபடுத்துவது. அதாவது பெயரின் இயல்பு ஈற்றில் சற்றுமாறுதல் அடைந்து பல பொருள்களை (கருத்துக்களை) உணர்த்துவது.

(உ-ம்) கந்தன், சிலநாய்களை வளர்த்தலால் கந்தனுடைய வீடு அந்நாய்களால் பாதுகாக்கப்பட்டது.

13—2. பிழை-கந்தன், நாய் என்பன செயப்படுபொருள்.
திருத்-கந்தனை, நாய் என்பன செயப்படுபொருள்.

13—3. ஆன்-உருபு (உம்) காலான் முடவன்.

13—5. பிழை-நின்று; திருத்- இன்+நின்று

15—1. மகரவீற்றுப்பெயர்கள் வேற்றுமை உருபு ஏற்கும்போது மகரமெய்கெட்டு அத்துச்சாரியை பெறுமிடத்து சாரியையின் அகரமும் கெடும்.

(மரம்+ஐ=மர+அத்து+ஐ=மர+த்து+ஐ=மரத்தை)

வேற்றுமை குறிப்பு:-- உகரவீற்று வீடு, கயிறு. என்பன போன்ற பெயர்கள் வேற்றுமை உருபு ஏற்கும்போது உகரம் ஏறிய மெய் இரட்டும்.

வீடு—வீட்டை, கயிறு—கயிற்றை, பூட்டால், எட்டுக்கு.

17. தெரிநிலை=வெளிப்படை 23. எச்சம்=குறைவு

28—2. பிழை-உணர்த்தாதலால்; திருத்-உணர்த்தாது. ஆதலால்.

30. அடைமொழி—நிலைமொழியை முன்அடுத்து வந்து அதை விவரித்து உரைக்கும் சொல். வீடு—கல் வீடு குணம்—சர்க்குணம்

உடம்படுமெய்—இரண்டு உயிர் எழுத்துக்களைப் பொருத்தும் மெய்.

தீ+ஆவி=தீயாவி—ய், பூ+எடு=பூவெடு—வ்.

32—1. பிழை-இயல்பு புணர்ச்சி; திருத்-இயல்புப் புணர்ச்சி.

34. குறிப்பு:- வல்லின வரிசையில் க், ச், த், ப் மெய்கள் உயிரோடு கூடி மொழிக்கு முதலில் வரும். ம=ம்+அ, ரா=ர்+ஆ

பக்கம் 36. தாழ், பிழை-திரவுகோல்; திருத்-திறவுகோல்.

---

அருணோதயம் பிரஸ், வண்ணார்பேட்டை. 1932

## OPINIONS—அபிப்பிராயம்

தாய்ப்பாஷை இலக்கணம் பிள்ளைகளுக்குப் பிரியமான பாடமல்ல. ஏனெனில் ஏற்றமுறையில், தெளிவாய், ஒழுங்காய் எழுதப்பட்ட புத்தகங்கள் இல்லை. படிப்பிக்கும் முறையும் சரியல்ல. அவைகளை இப்புத்தகம் தவிர்க்குமென நம்புகிறோம். போதிக்கும்போது பிள்ளைகளுக்கு விளங்காத ஒரு பதமாவது உபயோகிக்கவேகூடாது. அதோடு உதாரணங்களினின்று சட்டம் உண்டாக்கவேண்டும்.

புத்தகம் நேர் முறையிலெழுதப்பட்டாலும் உபாத்தியாயர் உதாரணங்களிலிருந்து பொது விதிக்கு நடத்துகிற (Inductive முறையில் ஒவ்வொரு பாடத்தையும் போதித்து பொது விதியிலிருந்து சிறப்பு விஷயத்துக்கு நடத்துகிற (Deductive) முறையில் உதாரணம் கேட்கவேண்டும். இம்முறைகளைக் கையாடினால் இலக்கணம் அதிகப் பிரியமான பாடமாகும். உபாத்தியாயர் உதாகரித்துத் தெளிவாய்ப்படித்துக் கொடுத்த பின்னர் இப்புத்தகம் மாணாக்கருக்கு வெகு பிரீதியாயும் மனதில் பதிக்க நல்லுதவியாயுமிருக்கும்.

இதில் ஏராளமான உதாரணங்களும் அப்பியாசங்களும் உண்டு. அதோடு பாடப்புத்தகத்தினின்றும் உபாத்தியாயர் மற்ற உதாரணங் கேட்கவேண்டும்.

இது Mr. எட்வர்ட். சுவாமிக்கண் அவர்களால் அரும்பிரயாசத்துடன் தான் படித்துக்கொடுக்கும் வகுப்புக்களுக்குப் பிரயோஜனப்படுமாறு தன் முதிர்ந்த அநுபவத்தோடு 5-ம்படிப் பிள்ளைகளுக்கென்று எழுதப்பட்டிருக்கின்றது. இதனால் ஷை வகுப்புப்பிள்ளைகள் பெறும்பயனடைவாரென்று நம்புகிறோம்.

(Rev.) G. தேவதாசன் B.A; L.T.
Head master
Bp. Sargent Secondary
Training School,

17—9—1932
Palamcottah.

# பால போத கணித புத்தகம்

Mr. A. J. எட்வர்ட், சுவாமிக்கண் இயற்றியது.

| | | | |
|---|---|---|---|
| 1. | முதலாம் புத்தகம்—முதல் வகுப்புக்கு | 0 | 3 |
| 2. | இரண்டாம் புத்தகம்—இரண்டாம் வகுப்புக்கு | 0 | 3 |
| 3. | மூன்றும் புத்தகம்—மூன்றும் வகுப்புக்கு | 0 | 4 |
| 4. | நான்காம் புத்தகம்—நான்காம் வகுப்புக்கு | 0 | 6 |
| 5. | ஐந்தாம் புத்தகம்—ஐந்தாம் வகுப்புக்கு | 0 | 8 |

*These can be got in Tamil and Telugu.*

கிடைக்கும் இடம்.

(1) The Secretary,
Christian Literature Society,
Park Town, Madras.

(2) The C. M. S. Bible & Book Depot,
Murugankurichy,—Palamcottah.
Tinnevelly Dt.

# பால போத இலக்கணம்

Mr. A. J. எட்வர்ட், சுவாமிக்கண் இயற்றியது.

| | | | |
|---|---|---|---|
| 1. | முதலாம் புத்தகம்—நான்காம் வகுப்புக்கு | 0 | 1 |
| 2. | இரண்டாம் புத்தகம்—ஐந்தாம் வகுப்புக்கு | 0 | [illegible] |
| 3. | மூன்றும் புத்தகம்—முதலாம் பாரத்திற்கு | 0 | [illegible] |
| 4. | நான்காம் புத்தகம்—இரண்டாம் பாரத்திற்கு | 0 | [illegible] |
| 5. | ஐந்தாம் புத்தகம்—மூன்றும் பாரத்திற்கு | 0 | 7 |

கிடைக்கும் இடம்.

(1) Mr. A. J. Edward Swamickan,
Teacher,
Murugankurichy,—Palamcottah.

(2) The C. M. S. Bible & Book Depot,
Murugankurichy,—Palamcottah.
Tinnevelly Dt.